DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. STC.277 /2022
**Depositions of DW 1 Witness for**

| Name | மல்லிகா | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th Day of February 2024

Signature of Witness.

**05.02.2024**

புகார்தாரர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1)நான் தற்போது மதுரை நாகமலை புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். முனிசிபல் ஆபிசில் அக்கவுண்டராக வேலை பார்த்து வருகிறேன். எனக்கும் புகார்தாரருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் அவரை பற்றி நான் தெரிந்து கொண்டேன். புகார்தாரருக்கு நான் எந்த காசோலையையும் கொடுக்கவில்லை. புகார்தாரரிடமிருந்து எந்த பணமும் நான் வாங்கவில்லை. எனது மகனுக்கும், சிவகாசியை சேர்ந்த வீரபாண்டியன் என்பவருக்கும் தான் பழக்கம்.

2)அவர்களுக்குள் கொங்கல் வாங்கல் இருந்தது. எனது மகன் அரசு வேலை வாங்கித்தருவதாக கூறி வீரபாண்டியன் என்பவரிடம் பணம் வாங்கியதால் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. பின்பு வீரபாண்டியன் எனது வீட்டிற்கு வந்து எனது மகன் பணம் வாங்கியுள்ளார் என்றும், அதை திருப்பி தரவில்லை என்றால்

தற்கொலை செய்துகொள்வதாக கூறினார். எனது மகனிடம் பேசிவிட்டு நான் சொல்கிறேன் என்று கூறினேன். அப்போது காப்புறுதியாக காசோலை கேட்டார். அதற்கு நான் எனது இரண்டு நிரப்பப்படாத காசோலைகளை கொடுத்தேன். தொகையை கொடுத்தவுடன் காசோலையை திருப்பி கொடுத்துவிடுவதாக கூறினார்.

3)என்னை கேட்காமல் காசோலையை பயன்படுத்த மாட்டேன் என்று கூறினார். வீரபாண்டியன் வங்கி கணக்கிற்கு எனது மகனின் வங்கி கணக்கிலிருந்து ரூ.5,00,000/- தொகை அனுப்பியுள்ளேன். பின்பு சரவணக்குமாருக்கும் பணம் போடும் படி வீரபாண்டியன் கூறினார். 14.03.2022ம் தேதியன்று எனது மகன் சரவணக்குமாருக்கு ரூ.95,000/- அனுப்பியுள்ளார். நான் கொடுத்த காசோலைகளில் ஒரு காசோலையை வீரபாண்டியன் பயன்படுத்தி நீதிமன்ற நடுவர் எண்1ல் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார். மற்றொரு காசோலையை வீரபாண்டியனின் அறிவுறுத்தலின் பேரில் புகார்தாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் புகார்தாரரிடம் சிவகாசியில் வைத்து எந்த காசோலையையும் கொடுக்கவில்லை. அவரிடம் இருந்த எந்த பணமும் வாங்கவில்லை. இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் வேண்டுக்கோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.